கிராமிய சேவைத் திட்டம்

ஈரோடு மண்டலம்
சத்தியமங்கலம் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
அரசூர் கிராமம்



(WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

- நோயற்ற வாழ்வு
- கல்வியில் மேன்மை
- சுற்றுப்புற சுகாதாரம்
- முதியோரைப் பாதுகாத்தல்
- மகளிர் மேம்பாடு
- குடும்ப அமைதி
- கர்மயோக வாழ்க்கைநெறி
- மனிதநேயம்
- மதநல்லிணக்கம்
- சமுதாய விழிப்புணர்வு

தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்

ஈரோடு மண்டலம்
சத்தியமங்கலம் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
அரசூர் கிராமம்

Contents

1. செயல்பாட்டு அறிக்கை 3
2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம் 4
3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும் 4
4. அரசூர் கிராமத்தின் தொடக்கவிழா 5
5. மருத்துவ முகாம் 7
6. மனநல ஆலோசனை முகாம் 7
7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் 7
8. ஆரோக்கிய மேம்பாட்டு முகாம் (மது ஒழிப்பு முகாம்) 8
9. மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி 8
10. பிரம்மஞானம் 9
11. மனைவிநல வேட்பு தினம் 9
12. சர்வதேச யோகாதினம் 9
13. முதல் நிலை அகத்தாய்வு 10
14. இரண்டாம் நிலை அகத்தாய்வு 10
15. மூன்றாம் நிலை அகத்தாய்வு 10
16. அனுபவ உரை Result Inference 11
17. எதிர்காலத் திட்டங்கள்: 17
18. வாழ்த்து: 17

1. செயல்பாட்டு அறிக்கை

S.No	Description	Information		
1.	கிராமத்தின் பெயர்	அரசூர்		
2.	கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள்	08-11-2025		
3.	கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள்	24-04-2026		
4.	கிராமிய சேவைத் திட்டம் காலம்	5 மாதங்கள்		
5.	மண்டலம்	ஈரோடு		
6.	அறக்கட்டளை	சத்தியமங்கலம்		
7.	நிதி உதவி வழங்கியவர்	*Bannari Rural Foundation*		
8.	கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை	ஆண்:120	பெண்:180	மொ:300
9.	கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள்	ஆண்:95	பெண்:210	மொ:305
10.	காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை	ஆண்:90	பெண்:205	மொ:295
11.	தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை	ஆண்:90	பெண்:205	மொ:295
12.	முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்	ஆண்:20	பெண்:90	மொ:110
13.	இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்	ஆண்:20	பெண்:85	மொ:105
14.	மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்	ஆண்:20	பெண்:85	மொ:105
15.	பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள்	ஆண்:05	பெண்:27	மொ:32
16.	ஆசிரியர் பயிற்சி	ஆண்:01	பெண்:06	மொ:07
17.	உடற்பயிற்சி பயின்றவர்கள் *(Students below 14)*	ஆண்:40	பெண்:60	மொ:100

2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மபூஷன்.அருள்நிதி.Dr.SKM.மயிலானந்தன் அவர்களால் **386**-வது கிராமமாக அரசூர் கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் *08-11-2025*-ஆம் தேதியிலிருந்து **24-04-2026**-ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்

4. அரசூர் கிராமத்தின் தொடக்கவிழா

Bannari Rural Foundation - நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஈரோடு மண்டலம், சத்தியமங்கலம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை சார்பாக 20-05-2025- தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மபூஷன்.அருள்நிதி.Dr.SKM.மயிலானந்தன் அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும்அரசூர் கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.













உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி











5. மருத்துவ முகாம்

23.12.2025 அன்றுஅரசூர் கிராமத்தில் VSP Medical Team மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஆண்கள்-12, பெண்கள்-18, மொத்தம்-30 அன்பர்கள் கலந்துகொண்டனர்.





6. மனநல ஆலோசனை முகாம்

18.02.2026 *அன்று Dr.Ramesh அவர்களால் அரசூர் கிராமத்தில் மன நல ஆலோசனை முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் ஆண்கள்-05, பெண்கள்-40, மொத்தம்-45 பேர் கலந்துகொண்டனர். தனிநபர் ஆலோசனை 8 அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.*





7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

21.01.2026 அன்றுஅரசூர் கிராமத்தில் மண்டலம் அறக்கட்டளை பொறுப்பாளர்கள் மற்றும் கிராம பொருப்பாளர்களால் கிராம மக்களுக்கு 135 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.





8. ஆரோக்கிய மேம்பாட்டு முகாம் (மது ஒழிப்பு முகாம்)

24.02.2026 அன்றுஅரசூர் கிராமத்தில் முது ஒழிப்பு விழிப்புணர்வு முகாம் *Mr.Jagadeesan and AAA Counsellors* அவர்களால் சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் கிராம மக்கள் மொத்தம் *35* நபர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





9. மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி

அரசூர் கிராமத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி துவக்கவங்கப்பட்டது. இலவச தையல் பயிற்சி மூலமாக *19* கிராமப் பெண்கள் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர்.









10. பிரம்மஞானம்





11. மனைவிநல வேட்பு தினம்





12. சர்வதேச யோகாதினம்





13. முதல் நிலை அகத்தாய்வு




14. இரண்டாம் நிலை அகத்தாய்வு




15. மூன்றாம் நிலை அகத்தாய்வு




16.அனுபவ உரை Result Inference

S.No.	Inference
1	96% of the participants are benefitted with the exercises and leading a healthy life
2	96% of the participants are satisfied with tailoring skill developed
3	Around 94% of the participants are out of the depression compared to before joining the program
4	94% of the participants are able to remember things
5	Around 93% participants satisfied with their children's education and attitude
6	92% of the participants mental health calmed due to the sky yoga meditation
7	74% (226) of the participants have made progress in family peace
8	Due to SKY Exercises and meditation-108 participants cured of Joint Pain, 20 Participants cured of sugar problem, 108 participants cured of Blood pressure, 69 participants cured of Asthma and Breathing Problem, 49 participants cured of Migraine and Headache, 20 participants cured of Eye problem with respect to sight, watering eyes , 49 women participants cured of Menstrual Problem (PCOD).
9	**96% of the participants are happy with the VSP Programme compared to only 25% before joining the program.**

Feedback Trend





ழ்க வையகம் குருவாழ்க
ழ்க வையகம் குருவே துணை
ழ்க வளமுடன்

1. ரூபிதா,
4, இண்டியம்பாளையம்,
ரசூர், சத்தி (வட்டம்),
ரோடு (மாவட்டம்).

என் பெயர் M. ரூபிதா, நான் அரசூரில் வசித்து வருகிறேன். எனக்கு உடலிலும், மனதிலும் சில பிரச்சனைகள் இருந்தன.

* அடிக்கடி கோபம் வரும். ஆனால் அதை கட்டுப்படுத்த முடியவில்லை.
* உடலில் வெரிகோஸ் இருந்தது.
* மனம் பக்குவம் இல்லாமல் எப்போதும் பயமாக இருக்கும்.

ஆனால், அரசூர் கிராம சேவைத் திட்டம் வந்த பிறகு, ஒருவரின் உதவியோடு, இதில் சேர்ந்தேன். அதன்மின் பயிற்சிகளும், தியானமும் செய்ய ஆரம்பித்த மின் உடலிலும், மனதிலும் ஆரோக்கம், அமைதி கிடைத்தது.

⇒ கயாகல்பம் உயர்சக்தி ஆற்றலை பெருக்கவும்,
⇒ தவம் கோபத்தை குறைக்கவும், மனம் ஒரு பக்குவமான நிலைக்கு கொண்டு வரவும் முடிந்தது.
⇒ கால்பயிற்சி, கைபயிற்சி, நாடிசுத்தி, தண்டுவடசுத்தி, மூச்சுபயிற்சி, கண்பயிற்சி, கபாலபதி என பயிற்சிகள் செய்ய உடலில் உள்ள உபாதைகள் குறைய ஆரம்பித்தன.
⇒ கற்றுக் கொண்ட அடிப்படை தவத்தால், என் வாழ்வில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக காரணம், தேவை குறித்து பேசி, அதற்கேற்ப என் செயல்களை செய்வேன். சமையலில் உணவின் ருசி அதிகமானது. எதையும் உற்றுநோக்கும் திறன் அதிகமானது.
⇒ ஒரு செயல் நடைபெற, தவம் செய்து வாழ்த்து கூறும்போது அந்த செயல் நடந்து முழுமை பெறுகிறது.

இவ்வளவு நன்மைகள் தரக்கூடிய மனவளக்கலையை உலகிற்கு வரிவழங்கிய ஆசான் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி ஐயாவுக்கும், அரசூர் கிராமிய சேவைத்திட்டத்திற்கு நீதி வழங்கிய பண்ணாரி அம்மன் சுகர் பவுண்டேசன் அவர்களுக்கும், எனக்கு பயிற்சி அளித்த பாலசுப்பிரமணியன் ஐயாவுக்கும், எழில் அம்மாவும் கோடான கோடி நன்றிகள்.

இப்படிக்கு
M. ரூபிதா.

A. பெருமாள்
2/331 - ரேசன் கடை வீதி
E. மேட்டுப்புதூர் · அரசூர் (Po)



அன்புடையீர்:

என்னுடைய பெயர் A. பெருமாள். நான் அரசூர் ரேசன் கடை தெருவில் வசித்து வருகிறேன். அரசு போக்குவரத்து கழகத்தில் பஸ்டுநராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். உடல்நலம் பாதிக்கப்பட்ட காரணத்தால், குறிப்பாக சர்க்கரை நோயால் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். அந்த நேரத்தில், எங்கள் ஊரில் உலக சமுதாய சேவை சங்கம் பண்ணாரி அம்மன் சுகர்ஸ் மூலம் அறிமுகமானது என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அவர்கள் நடத்தி வந்த கிராமிய சேவை திட்டத்தில் ஆரம்பம் முதலே இணைந்து, ஆசிரியர்கள் வழங்கிய வழிகாட்டுதலின் படி பயிற்சிகளை தொடர்ந்து செய்து வந்தேன். மிகவும் குறுகிய காலத்திலேயே என் உடல்நிலையில் நல்ல மாற்றம் ஏற்பட்டது காயகல்ப பயிற்சி மற்றும் தியானத்தை தொடர்ந்து செய்து வருவதன் மூலம் இப்போது மிகவும் நன்றாக உள்ளேன். அகத்தாய்வு பயிற்சியின் மூலம் கோபம் குறைந்து, மனதில் அமைதியும் நிம்மதியும் ஏற்படுகிறது. இவ்வளவு நன்மை தரக்கூடிய மனவளக்கலையை உலகிற்கு வழங்கிய அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கு என் கோடான கோடி நன்றிகளை மனமார தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த கிராமிய சேவை திட்டத்தை சிறப்பாக



வாழ்க வையகம் வாழ்க

Indrapriyatharshini.R
2/379, E.nettupudur,
Apasur & (Po)

என்னுடைய பெயர் இந்திராபிரியதர்ஷினி நான் கி.மேட்டுப்புதூரில் உள்ள இண்டியம்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் வீட்டு அருகில் உலக சமுதாய சேவாசங்கம் மற்றும் பண்ணாரி அம்மன் சுகர் பவுண்டேசன் இணைந்து கிராமிய சேவைத் திட்டத்தின் மூலம் யோக பயிற்சி வகுப்பு நடத்தி வந்தார்கள் நானும் இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சிகள் செய்தேன். பின்பு தான் எனக்கு இது ஒரு சிறப்பான பயிற்சி என்று புரிந்து கொண்டேன். இந்த பயிற்சிகளை செய்ததின் மூலம் என்னுடைய மன அடுத்தம், கோபம் மற்றும் தேவையில்லாத மனஉளைச்சலில் இருந்து விடுபட்டுவிட்டேன் காயகல்ப பயிற்சியும், தியானபயிற்சியும் மற்றும் அகத்தாய்வு பயிற்சியும் தினமும் செய்வதால் நான் புதுப்பொழிவுடனும், சந்தோஷமாகவும் மற்றும் நிம்மதியாகவும் இருக்கிறேன். இவ்வளவு நன்மை தரகூடிய மனவளக்கலையை கற்றுக் கொடுத்த குருவாகிய, அய்யா பாலசுப்பிரமணியம், எழில் அம்மா அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கலையை உலகிற்கு அறிமுகப்படுத்திய அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கு நான் கோடா கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்

இப்படிக்கு,
இந்திராபிரியதர்ஷினி



வாழ்க வையகம், வாழ்க வையகம், வாழ்க வளமுடன்

T. சாந்தாமணி
4/146, பழைய தபால் ஆபீஸ் வீதி
தேவாங்கபுரம்
அரசூர்.

என்னுடைய பெயர் T. சாந்தாமணி அரசூரில் நான் வசித்து வருகிறேன். எனக்கு யோகாவிற்கு செல்வதற்கு முன் கோபம் அதிகமாக வந்தது. சின்னசின்ன விசயத்திற்கு அதிகமாக டென்சன் ஆகும். உடல் ரீதியாக சில பிரச்சனைகள் இருந்தன. யோகாவிற்கு சென்ற பின் இப்பொழுது அந்த பிரச்சனைகள் இல்லை. இப்பொழுது மனஅமைதி, தெளிவு உள்ளது. இந்த சமயத்தில் தான் எங்கள் கிராமத்திற்கு உலகசமுதாய சேவ சங்கம் பள்ளாரி அகர் பவுண்டேசன் இணைந்து கிராமமிய சேவைத் திட்டம் கொண்டு வந்தார்கள். இத்திட்டத்தில் நாவும் ஆரம்பத்திலேயே சேர்ந்து ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்த பயிற்சிகளை செய்து வந்தேன். ஒன்று, இரண்டு, மாதங்களிலேயே உடல் ஆரோக்கியமடைவதை உணர்ந்தேன்.

காயகல்ப பயிற்சியும், தியானப் பயிற்சியும் தொடர்ந்து செய்து வந்தேன். அகத்தாய்வு பயிற்சிகள் மூலம் கோபம் குறைந்துள்ளது. மனதிற்கு நிறைவாக உள்ளது.

இவ்வளவு நன்மைகளை தரக்கூடிய மனவளக்கலை உலகிற்கு தந்த அருள் தந்தை வேதாந்த மகரிஷி அவர்களுக்கு மனமார்ந்த என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
T. சாந்தாமணி

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



C.KOKILA,
4/245, ANNA NAGAR,
ARASUR,

என் பெயர் கோகிலா நான் அரசூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு தலைவலி, சைனஸ் தொந்தரவு அதிகமாக இருந்தது. 2 மாதமாக மருத்துவமனைக்கு சென்றும் சரியாகவில்லை. தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் இருந்தேன். மிகவும் கவலையாக இருந்தேன். அந்த சமயத்தில் நான் எங்கள் ஊரில் உலக சமுதாய சேவா சங்கம் பண்ணாரி சுகர் பவுண்டேசன் இணைந்து கிராமிய சேவை திட்டம் கொண்டு வந்தனர். நானும் நம்பிக்கையோடு சென்றேன். உடற்பயிற்சி செய்தேன். தவம் கற்றுக்கொண்டேன் மிகவும் உடல் நலம் நன்றாக இருந்தது தலைவலி முழுமையாக போய்விட்டது அகந்தாய்வில் கலந்து கொண்டேன் எனக்கு கோபம் அதிகமாக வரும் இப்பொழுது கோபம் குறைந்துள்ளது. நான் நன்றாக இருக்கிறேன் மனம்நிறைவாக உள்ளது. நான் நலமாக இருக்கிறேன். இவ்வளவு நன்மைகள் தரக் கூடிய மனவளக் கலையை உலகிற்கு வழங்கிய ஆசான் அருள்தந்தை வேதாத்திரி மகரிசி அவர்களுக்கும் அரசூர் கிராமிய சேவை திட்டத்திற்கு நிதி வழங்கிய பண்ணாரி சுகர் பவுண்டேசனுக்கு நன்றி.

இப்படிக்கு
C. Kokila

17. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க அரசூர் கிராமம், சத்தியமங்கலம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

18. வாழ்த்து:

தொட்டம்பாளையம் கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மபூஷன்.அருள்நிதி.Dr.SKM.மயிலானந்தன் அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி அளித்த *Bannari Rural Foundation* நிறுவனத்திற்கும் இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த ஈரோடு மண்டல பொறுப்பாளர்களுக்கும், சத்தியமங்கலம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் *Asst.Prof.K.Balasubramaniyam & Asst.Prof.B.Ezhil* அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய *VSP* நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை
உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.
உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே
உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.

-வேதாத்திரி மகரிஷி

தொண்டாற்றி இன்பம் காண்போம்! நன்றி, வாழ்க வளமுடன்!

குருவின் சேவையில்
WCSC-VSP இயக்குனரகம்
அறிவுத்திருக்கோயில், ஆழியார்